**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 3, தஞ்சாவூர்**

**முன்னிலை-திரு.எஸ்.நளினகுமார், பி.ஏ., பி.எல்.,**

**நீதித்துறை நடுவர் எண் 3, தஞ்சாவூர்.**

**எம்.சி. 7/2017**

**ம.சா.1 கனகா என்பவரின் சாட்சியம்**

**நாள்- .09.2019**

மனுதாரர் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை:

ஜிபி பண்ணைக்கு அருகில் எதிர் மனுதாரருக்கு நிலம் இருப்பதற்காக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை. என்னை சமாதானம் செய்து திருமணம் செய்து கொள்கிறேன் என்று எந்த தேதியில், எந்த இடத்தில் சத்தியம் செய்தார் என்று மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. திருவையாறு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து எதிர் மனுதாரர் திருவையாறு நீதித்துறை நீதிமன்றத்தில் குற்ற வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த வழக்கு முடிவடைந்துவிட்டது என்றால் சரிதான். அந்த வழக்கிற்காக புகார் கொடுக்கும்போதும், சாட்சியம் அளித்தபோதும் மூன்றரை பவுனில் ஒரு தோடு, இரண்டேகால் பவுனில் ஒரு தோடு, இரண்டரை பவுனில் ஒரு மோதிரம், இரண்டு பவுனில் ஒரு மோதிரம், 40 கிராம் மதிப்புள்ள ஒரு ஜோடி கொலுசு, ரூ.40000/- ரொக்கம் ஆகியவற்றை என்னிடம் இருந்து எதிர் மனுதாரர் பெற்றார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் மூன்றரை கிராம் தோடு என்று சொன்னேன். இரண்டேகால் கிராம் தோடு என்று சொன்னேன். இரண்டரை பவுன் மோதிரம் என்று சொல்லவில்லை. இரண்டு பவுனில் ஒரு மோதிரம் என்று சொல்லவில்லை. மோதிரம் 3 மோதிரங்கள் மொத்தம் 8 1/2 கிராம் என்று சொல்லியுள்ளேன். ரூ.40000/- ரொக்க பணம் எதிர் மனுதாரர் வாங்கினார் என்று சொல்லியுள்ளேன். அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. பணம் என்னுடைய பணம் அல்ல. என் அம்மாவின் பணம். என்னுடைய மனுவில் நானும் எதிர்மனுதாரரும் திருமணம் செய்து கொள்ளாமலேயே கணவன் மனைவியாக குடும்பம் நடத்தினோம் என்று சொல்லியுள்ளேன். எதிர் மனுதாரர் மீது நான் புகார் கொடுத்த வருடம் 2012 ஆகும். திருவையாறு நீதிமன்றத்தில் நான் 01.02.2016 அன்று சாட்சியம் அளித்தேன். அவ்வாறு சாட்சியம் அளிக்கும்போது 11.04.2013 அன்று சமயபுரம் மாரியம்மன் கோவிலில் திருமணம் நடந்ததற்கான புகைப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் புகைப்படம் தாக்கல் செய்துள்ளேன். நான் நீதிமன்றத்தில் புகைப்படம் தாக்கல் செய்யாமல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சமயபுரம் மாரியம்மன் கோவில் அரசாங்கத்தால் நிர்வகிக்கபடும் கோவில் என்றால் சரிதான். சமயபுரம் மாரியம்மன் கோவிலின் அதிகாரிகளிடம் கிராம நிர்வாக அலுவலரின் சான்று,என் வயதை நிருபிக்க கூடிய சான்று ஆகியவற்றை கூட்ட சமயமாக இருந்ததால் சமர்ப்பிக்கவில்லை. மேற்படி ஆவணங்களை கொடுத்த பிறகு தான் அதிகாரிகள் முறைப்படி திருமணம் செய்து வைப்பார்கள் என்று சொன்னால் சரிதான். உரிய சான்றிதழ் அளித்து அதிகாரிகள் முன்னிலையில் திருமணம் நடைபெறவில்லை என்றால்

சரிதான். நான் மனுவில் சொல்லியுள்ளவாறு சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே எந்த காலத்திலும் திருமணம் நடைபெறவில்லை என்றாலும் எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே கணவன் மனைவி என்ற உறவுமுறை இல்லை என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு சொந்தமாக உள்ள சொத்துகள் குறித்து எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னை எதிர்மனுதாரர் பராமரிப்பதற்கு கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. திருவையாறு நீதிமன்ற தீர்ப்புரையில் திருமணம் ஆனதற்கான புகைப்படம் இருப்பதாக ஆவணப்பட்டியலில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரரிடம் இருந்து பணம் பறிப்பதற்காக காலதாமதமாக இந்த மனுவை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல தற்போது நான் கூலி வேலை செய்து வருகிறேன். ஒரு நாளுக்கு சுமார் ரூ.200/- சம்பாதித்து வருகிறேன். குற்ற வழக்கில் டிஎன்ஏ அறிக்கையில் கிடைக்கப்பெற்ற முடிவினை வைத்து எதிர்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரருக்கு எந்த சொத்துக்களும் இல்லை என்றாலும் அவர் எனக்கு ஜீவனாம்சம் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல.

(ஒப்பம்/-திரு.நளினகுமார்),
நீதித்துறை நடுவர் எண் 3,
தஞ்சாவூர்.